DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.171/2019 |
| Deposition of Witness | { PW.16 |
| | { Prosecution |
| | { |
| Name | : செல்வாம்பாள் |
| Father's Name | :--- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2025.

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.16 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

12, 13, 22 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் கொங்கணாபுரம் மூலப்பாதையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, 2 ஆகியோரை தெரியும். சடையனுக்கு 2 மகன்கள். அவர்கள் பெயர் முருகேசன் மற்றும் சின்னுசாமி. அவர்களுக்கு

திருமணமாகிவிட்டது. அவரது இளைய மகன் சுமார் 11 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். அவரது மனைவி பெயர் பேபி. கணவன் இறந்த பிறகு பேபி அவரது அம்மா வீட்டிற்கே சென்றுவிட்டார். சடையன் சுமார் 4 ஏக்கர் நிலம் கிரையம் வாங்கி மூலப்பாதையில் வசித்து வந்தார். அவரது மகன்கள் இருவரும் திருமணமாகி தனித்தனியாக வசித்து வந்தார்கள். மூத்த மகனுக்கு ஒரு மகனும், ஒரு மகளும், இளைய மகனுக்கு 2 மகள்களும் உள்ளார்கள். இந்நிலையில் சடையன் தனது சொத்தில் பாதியை மூத்த மகன் பெயருக்கு தானம் செய்து கொடுத்துவிட்டார். அதனால் இளைய மருமகள் பேபி தனக்கும் சொத்து எழுதி கொடுக்க வேண்டும் என்று சடையனிடம் கேட்ட போது பேத்திகள் பெரியதான பின்பு எழுதி வைப்பதாக சொல்லியுள்ளார். இந்த விவரத்தை சடையன் என்னிடம் சொல்லியிருந்தார். இந்த சமயத்தில் சடையனை சுமார் 10 நாட்களுக்கு மேலாக காணவில்லை என்று பேசிக்கொண்டார்கள். அதன் பின்பு சடையன் திரும்பி வந்த போது நான் அது பற்றி அவரிடம் கேட்டதற்கு தன்னை கடத்தி சென்று வைத்திருந்துவிட்டு திண்டுக்கல் அருகில் விட்டுவிட்டு சென்றதாகவும், அங்கிருந்து நடந்து வந்து சேர்ந்ததாகவும் சொன்னார். பின்பு கொஞ்ச நாட்களில் ஒரு நாள் நான் என் காட்டிலிருந்த போது சடையனின் காட்டில் சுமார் 100 ஆட்கள் வந்து சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்த வீட்டை பொக்லின் வண்டியால் இடித்தார்கள். அங்கிருந்த தென்னை மரம் மற்றும் இதர மரங்களையும் போர்வெல் ஆகியவற்றை இடித்து நிரவி விட்டார்கள். சடையன் பரமசிவம் என்பவருக்கு நிலத்தை விற்பனை செய்துவிட்டதாகவும், அவர் தான் அதை இடித்து நிரவியதாகவும் பேசிக்கொண்டார்கள். அதனால் சடையனின் மூத்த மகன் மாமியார் வீட்டிற்கு சென்று குடியேறிவிட்டதாகவும், சடையன் வேறு ஏதோ இடத்தில் இருந்ததாகவும் பேசிக்கொண்டார்கள். தற்போது சடையன் மூத்த மகன் வீட்டில் இருக்கிறார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நானும் சடையனும் ஒரே வகுப்பை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர் எனக்கு தூரத்து உறவினர். சம்பவம் நடந்து சுமார் 5 அல்லது 6 மாதங்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். சடையன் எனக்கு உறவினர் என்பதாலும், போலீசார் சொல்லி கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

(மற்ற எதிரிகள் அனைவரும் 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள். )

Sd/-செல்வாம்பாள்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.